செ.வெ.எண்.57 நாள்: 27.06.2020

தூத்துக்குடி மாவட்டம் வசவப்பபுரம் சோதனை சாவடியில் வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தரும் நபர்களை சோதனை செய்யும் பணிகளை தூத்துக்குடி மாவட்ட கொரோனா தடுப்பு கண்காணிப்பு அலுவலர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., அவர்கள், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

---

தூத்துக்குடி மாவட்டம் வசவப்பபுரம் சோதனை சாவடியில் வெளி மாவட்டங்களில் இருந்து வருகை தரும் நபர்களை சோதனை செய்யும் பணிகளை தூத்துக்குடி மாவட்ட கொரோனா தடுப்பு கண்காணிப்பு அலுவலர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., அவர்கள், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் இன்று (27.06.2020) நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தனர். வெளி மாவட்டம் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து, திருநெல்வேலி மாவட்ட பகுதியில் இருந்து e pass பெற்று வருபவர்கள் முறையாக அனுமதி பெற்று வருகிறார்களா, போலியான e pass பயன்படுத்தப்படுகிறதா, e pass கியுஆர் கோடு ஸ்கேன் செய்யப்பட்டு உண்மை தன்மை பரிசோதிக்கப்படுகிறதா என்பதை ஆய்வு செய்தார்கள்.

மேலும், தூத்துக்குடி மாவட்ட கொரோனா தடுப்பு கண்காணிப்பு அலுவலர் திரு.குமார் ஜெயந்த், இ.ஆ.ப., அவர்கள், தூத்துக்குடி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி, இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் இன்பென்ட் ஜீசஸ் கல்லூரி விடுதியில் அமைக்கப்பட்டுள்ள தனிமைபடுத்தப்பட்ட முகாமில் தங்கவைக்கப்பட்டுள்ள நபர்களின் விபரங்களை நேரில் சென்று பார்வையிட்டு, அங்கு உணவு, குடிநீர் உள்ளிட்ட வசதிகள் ஏற்படுத்தி தரப்பட்டுள்ளதா என்பதையும் பார்வையிட்டார்கள். வெளி மாவட்டத்தில் இருந்து இருசக்கர வாகனம், நான்கு சக்கர வாகனங்களில் வரும் அனைவரும் e pass வைத்துள்ளார்களா என்பதை தீவிரமாக சோதனை செய்ய வேண்டும். e pass பெற்று செல்லும் நபர்களின் விவரங்களை கணிணியில் பதிவேற்றம் செய்ய வேண்டும். e pass பெறாத நபர்களை மாவட்டத்திற்குள் பயணிக்க அனுமதி அளிக்கக்கூடாது எனவும், மாவட்டத்திற்குள் செல்ல வருகை தரும் அனைத்து வாகனங்களும் முறையாக அனுமதி பெற்றுள்ளார்களா என்பதை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும் என அலுவலர்களுக்கு அறிவுரைகளை வழங்கினார்கள்.

ஆய்வின்போது கூடுதல் ஆட்சியர் (வருவாய்) திரு.விஷ்னுசந்திரன், இ.ஆ.ப., தூத்துக்குடி சார் ஆட்சியர் திரு.சிம்ரோன் ஜீத் சிங் காலோன், இ.ஆ.ப., ஸ்ரீவைகுண்டம் வட்டாட்சியர் திரு.சந்திரன், துணை வட்டாட்சியர் திரு.சிவக்குமார், கருங்குளம் வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி.சுப்புலட்சுமி மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்கள் உட்பட பலர் உள்ளனர்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தூத்துக்குடி.